நகர் ஊரமைப்பு துறை (DTCP)

நாமக்கல் மாவட்டம் நகர் ஊரமைப்பு அலுவலகம்

நாமக்கல் மாவட்டம்

நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டம், மோகனூர் ஊராட்சி ஒன்றியம், இடும்பன்குளம் கிராமம், சர்வே.எண்: 118/2, 121/1B & 122/1A-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான ஒப்புதல் வரைபடம்.

அளவு : 1:200

கோப்பு எண் : MNNW8O4J / 2025-நா.மா



குறிப்பு:

1)	மனைப்பிரிவின் பரப்பு	:	2.4025 ஏக்கர் (அ) 104733.72 ச.அடி (அ) 9730.00 ச.மீ
2)	மனைப்பிரிவின் எல்லை	:	
3)	நிலையிலுள்ள சாலை	:	
4)	உத்தேச மனைபிரிவு சாலையின் பரப்பு	:	2435.62 ச.மீ
5)	கோரிய மனைகள்	:	46
6)	ஒதுக்கிய மனைகள்	:	46
4)	தேவையான பூங்காவிற்கான பரப்பு	:	(9730.00-2435.62) x 10% = 729.43 ச.மீ
	(மனைப்பிரிவின் மொத்தப் பரப்பு - மனைப்பிரிவின் சாலைகளின் பரப்பளவு) x 10%		
5)	அரசு வழிகாட்டி மதிப்பீட்டுத்தொகை	:	700.00 ச.மீ (10.42%)
	கணக்கீடு செய்வதற்கு ஈடான பூங்காப்பரப்பு		
6)	தேவைப்படும் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யவேண்டிய பொது உபயோகம் (PUBLIC PURPOSE) பரப்பு	:	(9730.00-2435.62)x 0.5% - 36.47 ச.மீ
	(மனைப்பிரிவின் மொத்தப் பரப்பளவு - மனைப்பிரிவின் சாலைகளின் பரப்பளவு) x 0.5%		
7)	தேவைப்படும் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யவேண்டிய தமிழ்நாடு மின்வாரியம் (TANGED CO) பரப்பு	:	(9730.00-2435.62)x 0.5% = 36.47 ச.மீ
	(மனைப்பிரிவின் மொத்தப் பரப்பளவு - மனைப்பிரிவின் சாலைகளின் பரப்பளவு) x 0.5%		

பொது உதுக்கீடுகள்

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை - (தானப்பத்திர ஆவண எண்: 2813/2025 மற்றும் 2815/2025, நாள்:11.06.2025)

8)	மனைப்பிரிவுகளின் சாலையின் பரப்பு	:	2435.62 ச.மீ
9)	பொது உபயோகம் (PUBLIC PURPOSE) பரப்பு	:	43.55 ச.மீ 1.1%
10)	தமிழ்நாடு மின்வாரியம் (TANGED CO) பரப்பு	:	58.03 ச.மீ 1.5%

நிபந்தனைகள்:

1. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை வந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்னும்,எந்தத் துறைக்காகவும் நில ஆர்ஜித்ப் படடியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்படவில்லை என்னும் உள்ளாட்சி உறுதி செய்ய வேண்டும்.
2. அரசாணை எண்.71 ஊரக வளர்ச்சித்துறை நாள் 16.06.2003 -ன்படி நில உரிமம் குறித்து உள்ளாட்சி நிர்வாக அதிகாரி முழு திருப்தியில் உள்ளது எனச் சான்றளித்துள்ளதன் பேரில் இம்மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
3. அரசாணை எண் 18-ன், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள் 4.2.2019-ன் படி அரசு வழிகாட்டி மதிப்பின்படி தொகையை செலுத்தப்பட வேண்டும்.
4. நீல உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால், மனைப்பிரிவிற்குத் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதில் ஏதேனும் பாதிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் / ஆணையர், அவர்களால் இரத்து செய்யப்படும்.
5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்களையும் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
6. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் மேலும் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில் நுட்ப அனுமதி திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரயப்பத்திரம் குத்தகை பத்திரம்/பட்டா தானப்பத்திரம்/ பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமைபுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.
   சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தன் நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
7. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை எவ்வித மாற்றமும், விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'x4' அளவிலான நிரந்து தகவலலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரகரிக்கப்பட வேண்டும்.
8. உத்தேச மனைப்பிரிவு அமையும் நிலம் தொடர்பாக நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலையில் இருப்பின் இத்துறையின் மனைப்பிரிவு அனுமதி செல்லத்தக்கதல்ல.
9. உத்தேச மனைப்பிரிவின் ஊடே நீரோடைகள் அமைபுமாயின் அதற்கு பாதிப்பு ஏற்படாதவாறு கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும்.
10. உத்தேச மனைப்பிரிவின் ஊடே HT LINE,LT LINE, மற்றும் TELEPHONE LINE, செல்லுமாயின் அதனை சாலையின் போக்கிற்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட வேண்டும்.
11. உத்தேச மனைப்பிரிவு இடத்தில் கட்டிடம் கட்டும் போது உரிய விதிகளை பின்பற்றி உரிய அனுமதி பெற்று கட்டப்பட வேண்டும்.
12. உத்தேச மனைப்பிரிவில் எந்தவித மாற்றம் செய்வதாக இருந்தாலும் இத்துறையின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

ம.வ/ந.ஊ (நா.மா) எண் :164/2025

அளவர்/உதவி வரைவாளர்

வரைபடம் சரிபார்க்கப்பட்டது

Signature valid
Signed by: Assistant Director
Location:Namakkal
Date:2025.07.01 17:00:21

Signature valid
Signed by: Village Panchayat President
Location:Namakkal
Date:2025.10.04 16:33:14

மேற்பார்வையாளர்/வ.நி-2

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
நாமக்கல் மாவட்டம்